# கதக் - வடக்கிந்திய கிருஷ்ண கானம்




கதக் நாட்டியமாடும் மங்கை

எழும்பூர் அருங்காட்சியகத்தில் இன்று மூன்று மணியளவில் கதக் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. வடக்கிந்தியாவின் அருங்கலையாகிய இந்நாட்டியம், இசை நயத்துக்கும், சிருங்கார ரஸத்திற்கும், நளினத்திற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இந்நாட்டிய பத்ததி முறையே, தத்கர், பல்டாஸ், தோராஸ், அமட், பாஸ்ஸ் என்று அடுக்காக பிரிவினைகள் உள்ளன. அவை வரிசையாக ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இடம் பெறுகிறது.

திருமதி ஸ்ரீவித்யா, குரு முன்னா சுக்லா, திருமதி ராணி காணம், தேர்வாளர்களாக இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்று மெருகூட்டினர். ஆந்திர பிரதேசம், தில்லி, குஜராத், ஹரியானா, கர்நாடகம், மத்தியப்பிரதேசம், மஹாராஷ்டிரம், தமிழ்நாடு, திரிபுரா ஆகிய மாநிலங்களிலிருந்து மாநிலத்துக்கு ஒருவர் விதம் போட்டியாளர்கள் பங்கேற்றனர். பங்கேற்பாளர்கள், பதினைந்திலிருந்து முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவர்கள் இப்போட்டியில் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டிலிருந்து பங்கேற்றவர், குமாரி லஷ்மி என்பவர். கதக் நாட்டியத்தின் அருமை பெருமையை மிக நேர்த்தியாக விளக்கினார். பரத நாட்டியமும் கற்றுக் கொண்டதாகவும் அதன் பயனாக, கதக் நாட்டிய பாணியைக் கற்றுக் கொள்வது எளிதாக இருந்ததாகக் கூறினார். அவரது நிகழ்ச்சி அழகுற அமைந்து, பூரண பொலிவுடன், ஒளி விதம் கூடாக விளங்கியது. இவர் கற்பனை வளத்துடன் அமைத்திருந்த நிகழ்ச்சிகள், அவையோரை மெய்மறக்கச் செய்தன. தமிழ்நாட்டில் பிறந்து, வடக்கத்திய நாட்டியத்தை மெய்ப்பட அழகாக வளர்த்து வெளி அக்கறையில் உயர்நிலையை அடைய வரும் குமாரி லஷ்மி, தமிழகத்துக்குப் பெருமை சேர்க்கிறார். அவர் வெளிநாடுகளுக்கும் சென்று ஆடவும் முயற்சியும் ... முயலாகது வாழ்க இளைய சமுதாயத்திற்கான நம்பகை ஓங்குக அவர்களின் புகழ்

